RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 319 | நவம்பர்.19 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## "பெங்களூருவை விட்டு வெளியேறுங்கள்"... ரூ. 50 கோடி வரையிலான சலுகைகளுடன்.!



பெங்களூரு, நவ.19-

பெங்களூருவுக்கு வெளியே உள்ள நகர்களில் புதிதாக ஸ்டார் அப் நிறுவனங்களைத் தொடங்குபவர்களுக்கு கர்நாடக அரசு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

அதிக நெரிசல் மிகுந்த நகரங்களைப் பட்டியலிட்டால் இந்தியாவிலும் சரி, உலகளவிலும் சரி.. எதாவது ஒரு இடம் பெங்களூருவுக்கு ஒதுக்கிவிடலாம். போக்குவரத்து நெரிசல், மக்கள்தொகை அடர்த்தி, வீட்டு வாடகை உயர்வு உள்ளிட்டவைகள் சாமானிய மக்கள் பலரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இது ஒருபுறம் இருந்தாலும், அதிகளவிலான மக்கள் தொகை அடர்த்தி, வேலைத்தேடி பெங்களூருவுக்கு வரும் இளைஞர்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு ஸ்டார் அப் நிறுவனங்களும் மழையில் முளைத்த காளான் போல அதிவேகமாக உருவாகி வருகின்றன. இதனால், பெங்களூரு மட்டும் வேகமாக வளர்ந்த நிலையில் மற்ற மாவட்டங்கள் போதிய வளர்ச்சியைப் பெறவில்லை.

இந்த நிலையில், கர்நாடக அரசு, தனது தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2025 2030 ன் அடிப்படையில் இரண்டாம் தர நகரங்களில் தொழில் நிறுவனங்களை விரிவுபடுத்தும் முயற்சியாக புதியதாக தொழில் துவங்கவுள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்குப் பல்வேறு சலுகைகளை வெளியிட்டுள்ளது.

கர்நாடகத்தில் உள்ள இரண்டாம் தர நகர்களான மைசூரு, மங்களூரு, ஹூப்லி தர்வாத், பெலகாவி, கலபுரகி, ஷிவமோகா, தேவநகரி, தும்மகூரு உள்ளிட்ட இடங்களில் ஸ்டார் அப் நிறுவனங்களை தொடங்குபவர்களுக்கு பல்வேறு மானியங்கள், சலுகைகள் வழங்க கர்நாடக அரசு முடிவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்திற்காக கர்நாடக அரசு சுமார் ரூ.960 கோடி வரை நிதி ஒதுக்கியுள்ளது.

ரூ.2 கோடி வரையிலான வாடகையில் சுமார் 50 சதவிகிதம் வரை தள்ளுபடியும், சொத்து வரியில் மூன்று ஆண்டுகளுக்கு 30 சதவிகிதம் வரை தள்ளுபடியும், மின்சார கட்டணத்தில் 5 ஆண்டுகளுக்கு 100 சதவிகித தள்ளுபடியும் பெறலாம்.

அதேபோன்று, செய்யறிவு (AI), பிளாக்செயின் (blockchain) மற்றும் குவாண்டம் கம்ப்யூட்டிங் போன்ற துறைகளில் பணிபுரிபவர்களுக்கு தொலைபேசி மற்றும் இணைய பில்களில் 25 சதவிகிதத்தையும் திரும்பப் பெறலாம்.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு செலவுகளில் சுமார் ரூ.50 கோடி வரையில் 40 சதவிகிதம் தள்ளுபடி பெறலாம் என்றும் கூறப்படுகிறது.

இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் துவங்கும் என்றும், முதலில் வரும் நூறு பேருக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜாக்டோ ஜியோ போராட்டத்தை திமுக அரசு தூண்டுகிறதா? சட்டப்பேரவை தலைவர் அப்பாவு பதில்

திருநெல்வேலி: நவ.19-

ஜாக்டோ ஜியோ போராடுவது அவர்கள் உரிமை. போராட்டத்தை தூண்ட வேண்டிய அவசியம் திமுகவுக்கு இல்லை. அவர்களுக்கு என்னவெல்லாம் நல்லது செய்ய வேண்டுமோ அதை எல்லாம் தமிழக அரசு செய்கிறது என தமிழக சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் வ.உ.சியின் நினைவு தினத்தை ஒட்டி அவரது மணிமண்டபத்தில் உள்ள சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய சட்ட பேரவை தலைவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அரசியலில் இருப்பவர்கள் வஉசியை முன்மாதிரியாக எடுத்துக் கொள்ள வேண்டும். எஸ்ஐஆர் விவாகரத்தில் திமுகவுக்கு அச்சமில்லை.

எஸ்ஐஆர் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் விதிப்படி அரசு செயல்படுகிறது. அதே நேரத்தில் இந்த நடவடிக்கைக்கு எதிராக போராட்டங்கள் நடத்தியதுடன், உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந்து உள்ளது. எஸ்ஐஆரை எதிர்த்து போராடுகிறோம் என்ற பெயரில் திமுகவை எதிர்த்து தமிழக வெற்றி கழகம் போராட்டங்களை நடத்தியுள்ளது.

எஸ்ஐஆரை எதிர்க்கிறோம் என்றால் உச்ச நீதிமன்றத்தில் விஜய் வழக்கு தொடர்ந்து இருக்கலாம். மத்திய தேர்தல் ஆணையத்துக்கு மனுவை அனுப்பாமல் மாநில தேர்தல் ஆணையத்திற்கு மனுவை அனுப்பி உள்ளார். எஸ்ஐஆரை எதிர்க்கும் தமிழக வெற்றி கழகம் போராட்டம் வெறும் கண்துடைப்பு. ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தை மனதில் வைத்து செயல்படும் அவர்களது போராட்டத்தை மக்கள் நம்பவில்லை. ஆர்எஸ்எஸ் சித்தாந்தத்தில் அவர்கள் இருவரும் ஒன்றுபடுகிறார்கள்.

ஜாக்டோ ஜியோ போராடுவது அவர்கள் உரிமை. போராட்டத்தை தூண்ட வேண்டிய அவசியம் திமுகவுக்கு இல்லை. அவர்களுக்கு என்னவெல்லாம் நல்லது செய்ய வேண்டுமோ அதை எல்லாம் தமிழக அரசு செய்கிறது.

மத்திய அரசு அகவிலைப்படியை உயர்த்தியதும் மாநில அரசும் அகவிலைப் படியை உயர்த்தி வழங்கியுள்ளது. மத்திய அரசு தமிழகத்துக்கு அளிக்க வேண்டிய நிதியை வழங்காமல் தமிழகத்தில் நிதி நெருக்கடியை உருவாக்க நினைக்கிறது. இவ்வாறு தெரிவித்தார்.




■ மாண்புமிகு பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள் தலைமையில் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் குருநானக் தேவ் பல்கலைக்கழகத்தில், சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் சார்பில், நாஷா முக்த் பாரத், குஷால் பாரத் திட்டத்தின் கீழ் நாஷா முக்த் பாரத் அபியானின் 5 ஆண்டு கொளர்டாட்டம் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்கு எதிரான உறுதிமொழி நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருதநகர் மாவட்டம், சூலக்கரை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆப, அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு உறுதிமொழி எடுத்துக் கொர்டனர்.

# கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம் நிராகரிப்பு: மத்திய அரசு!



கோவை, நவ.19-

கோவை மாநகரில் ரூ. 10,740.49 கோடியில் 34.8 கி.மீ. தொலைவுக்கும், மதுரை மாநகரில் ரூ. 11,368.35 கோடியில் 32 கி.மீ. தொலைவுக்கும் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்துவதற்கு திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு தமிழக அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மத்திய அரசின் 50 சதவீதம் பங்கீடு அளிக்கக் கோரி திட்ட அறிக்கைகளை ஒப்புதலுக்காக தமிழக அரசு அனுப்பி வைத்தது. பல மாதங்களாக ஒப்புதல் அளிக்காமல் மத்திய அரசு நிலுவையில் வைத்திருந்தது.

இந்த நிலையில், மெட்ரோ ரயில் திட்டத்துக்கு அனுமதி அளிக்க குறைந்தது 20 லட்சம் மக்கள்தொகை தேவை என்றும், கோவை மற்றும் மதுரையில் 15 லட்சம் மக்கள்தொகை மட்டுமே இருப்பதால் அனுமதி அளிக்க முடியாது எனக் கூறி, திட்ட அறிக்கைகளை மத்திய அரசு நிராகரித்துள்ளது.

ஆனால், பாஜக ஆளும் மாநிலங்களான மகாராஷ்டிரம் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் மக்கள்தொகை குறைவாகவுள்ள ஆக்ரா, சூரத், நாக்பூர், புணே, கான்பூர் உள்ளிட்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 22% ஆக உயர்த்த வேண்டும்: பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

சென்னை, நவ.19-

விவசாயிகளின் நலன்கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை 17 சதவீதத்தில் இருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.


இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்நாடு குறுவை பருவத்தில் அதிக நெல் உற்பத்தி மற்றும் கொள்முதலில் சாதனை படைத்துள்ளதையடுத்து விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிடவும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முதல்வர் மு.க. ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

சாதனை படைத்த குறுவை பருவ நெல் உற்பத்தி

தமிழ்நாட்டில், குறிப்பாக டெல்டா மாவட்டங்களில், இந்த ஆண்டு கரீஃப் (குறுவை) பருவத்தில் மிக அதிக அளவு நெல் உற்பத்தி எய்தப்பட்டுள்ளது. 16.11.2025 நிலவரப்படி நெல் கொள்முதல் கடந்த 20242025 ஆம் ஆண்டினுடைய 4.81 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து நடப்பாண்டில் 14.11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்றும் இது தமிழ்நாட்டின் வரலாற்றில் குறுவை (கரீஃப்) பருவத்தில் நெல் கொள்முதலில் புதிய சாதனையாகும் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 16.11.2025 நிலவரப்படி 1,932 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, 1,86,674 விவசாயிகளிடமிருந்து 14.11 லட்சம் மெட்ரிக் டன் நெல்லை ரூ. 3,559 கோடி வழங்கி கொள்முதல் செய்துள்ளது. ஒப்பீட்டளவில், கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் (16.11.2024 வரை) 1,095 நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் 4.83 லட்சம் மெட்ரிக் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது.



தற்போதைய நெல் கொள்முதல் பருவத்தில் (31.08.2026 வரை) விற்பனைக்குரிய சந்தை உபரி நெல் 98.25 லட்சம் மெட்ரிக் டன்னாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி அடிப்படையில் இது 66.81 லட்சம் மெட்ரிக் டன் ஆகும். இது தொடர்பாக, 8.8.2025 அன்று, Kharif Marketing Season (KMS) 2025-2026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 20 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்குமாறு மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு முன்மொழிவு பரிந்துரைக்கப்பட்டது.

தற்போது மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை, ரிவிஷி 20252026க்கான அரிசி கொள்முதல் இலக்காக 31.3.2026 வரை 16 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயித்துள்ளது. நெல் சாகுபடியில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் சாதனை அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதைக் கருத்தில் கொண்டு, ரிவிஷி 20252026க்கான 16 லட்சம் மெட்ரிக் டன் அரிசி இலக்கை, கரீஃப் பருவத்தின் கடைசியில் கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவிற்கேற்ப உயர்த்தி திருத்தம் செய்திட தமிழ்நாடு அரசுக்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இரண்டாவதாக, காவிரி டெல்டா பகுதி மற்றும் பிற மாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவை

17 சதவிகிதத்திலிருந்து 22 சதவிகிதமாக நிர்ணயிக்குமாறு தமிழ்நாடு அரசால் 19.10.2025 அன்று மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறைக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மூன்று குழுக்கள் 25.10.2025 முதல் 28.10.2025 வரை தமிழ்நாட்டில் களப் பயணம் மேற்கொண்டு விவசாயிகளிடமிருந்து நெல் மாதிரிகளை சேகரித்தன. ஆனால் தளர்வு தொடர்பான உத்தரவுகள் இன்றளவும் கிடைக்கவில்லை.

கரீஃப் (குறுவை) பருவ கொள்முதல் இன்றளவும் நடந்து கொண்டிருக்கும் நிலையில், 16.11.2025 முதல் வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடையும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது கொள்முதல் செய்யப்படும் நெல்லில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும்.

எனவே, விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் வகையில் ஈரப்பத அளவு தளர்வு உத்தரவினை விரைவாக வழங்கிட வேண்டும் என்று முதலமைச்சர், பிரதமரிடம் இக்கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

செறிவூட்டப்பட்ட அரிசி மாதிரிகள் எடுப்பதில் தளர்வு ஆணைகள் கோரி மாநில அரசு, 07.10.2025 அன்று 5 ஒப்பந்ததாரர்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை விநியோகிக்க உத்தரவு வழங்கியது என்றும் 16.11.2025 நிலவரப்படி ஒப்பந்ததாரர்கள் 1,760 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, FoR-Trace இணையதளத்தில் 123 மாதிரிகளைப் பதிவேற்றியுள்ளனர் என்றும், இதில் பதிவேற்றப்பட்ட 77 மாதிரிகளில், இதுவரை 33 மாதிரிகளுக்கு மட்டுமே முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒரு மாதிரி முடிவை அறிவிக்க கிட்டத்தட்ட 12 நாட்கள் ஆகின்றன என்பதை குறிப்பிட்டு, இந்தமுறை காலதாமதத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியை நகர்வு செய்திடவும், அதனைத் தொடர்ந்து வரவிருக்கும் சம்பா (ரபி) பருவ நெல் கொள்முதலுக்குத் தேவையான இடத்தினை ஏற்படுத்திடவும் அதிக அளவு செறிவூட்டப்பட்ட அரிசி அரவைக்குத் தேவைப்படுகின்றன.

எனவே, தற்போதுள்ள 25 கிலோ திஸிரி சிப்பமிடும் அளவை 50 கிலோவாக அதிகரிக்க வேண்டும் என்றும், மாதிரி தொகுதி அளவை 10 MTஇலிருந்து 25 MT ஆக ஙிமிஷி தரநிலைகளுக்கு (ஒரு தொகுதிக்கு 500 மூட்டைகள்) ஏற்ப அதிகரிக்க வேண்டும் என்றும், மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் எடுக்கப்பட வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கை குறைந்து, இடப்பற்றாக்குறை நீங்கி, முடிவுகளை அறிவிக்கும் காலம் 12 நாட்களிலிருந்து 7 நாட்களாகக் குறையும் என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர், இது தொடர்ச்சியான நெல் அரவைக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்கி, தென்னிந்திய மாநிலங்களில் உள்ள ஆய்வகங்களில் சோதனை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பரிந்துரைகளை பரிசீலனை செய்து நெல் அரவை ஆலைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் விநியோகத்தினை எளிதாக்கத் தேவையான உத்தரவுகளை பிறப்பித்திட வேண்டுமென்றும், இதன்மூலம் சோதனை முடிவுகளைப் பெறுவதற்கான காலம் கணிசமாகக் குறையும் என்றும், தமிழ்நாடு விவசாயிகளின் நலன் கருதி இவ்விவகாரத்தில் விரைவில் நல்ல முடிவுகளை எடுத்திட, முதலமைச்சர், பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வருவாய்த் துறையினர் போராட்டத்தை திமுக அரசு தூண்டுகிறது: நயினார் நாகேந்திரன் குற்றச்சாட்டு

திருநெல்வேலி: நவ.19-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணிகளுக்கு எதிராக வருவாய்த் துறையினர் போராட்டம் நடத்த திமுக அரசு தூண்டுகிறது என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம்சாட்டினார்.

திருநெல்வேலியில் வ.உ.சியின் நினைவு தினத்தை ஒட்டி அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய பின் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: வ.உ.சிக்கு அஞ்சலி செலுத்துவதில் பெருமைப் படுகிறோம். சுதந்திரப் போராட்ட வீரர்களை கவுரவப்படுத்துவதில் முதல் ஆளாக இருப்பவர் பிரதமர் மோடி.

திருநெல்வேலி மக்களுக்கு நான் என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறேன். வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை எதிர்த்து வருவாய்த் துறையினர் தமிழகத்தில் போராட்டம் அறிவித்துள்ளனர். திமுக அரசு தான் வருவாய்த் துறையினரை தூண்டிவிட்டுள்ளது. வருவாய்த் துறையினர் அரசு மீது மிகுந்த கோபத்தில் உள்ளனர்.

தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட போது அவர்களை திமுக அரசு அடித்து மிரட்டியது. இப்போது அவர்களுக்கு சோறு கொடுக்கிறார்கள். சோறு கொடுத்தால் மட்டும் போதுமா?. பாஜகவும் விஜய்யும் கூட்டு சேர்ந்துவிட்டனர் என்று சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவுக்கு கூறியுள்ளார் . அவரது விருப்பம் நிறைவேறும்.

எங்களது கூட்டணி குறித்து 2026 ஜனவரி 1ம் தேதிக்கு பின்பு அறிவிப்போம். பிஹாரில் அரசியல் ஆலோசகர் பிரசாந்த் கிஷோர் 2% வாக்குகளை மட்டுமே பெற்றுள்ளார். அதுபோன்ற நிலைமை தமிழக வெற்றி கழகத்திற்கும் ஏற்படும்." என்று நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

# கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய நிலங்களின் பாசன பயன்பாட்டிற்காக ஆரல்வாய்மொழி பொய்கை அணையிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா பொய்கை அணையிலிருந்து, தண்ணீர் திறந்து விட்டார்



கன்னியாகுமரி, நவ.19-

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாய நிலங்களின் பாசன பயன்பாட்டிற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, ஆரல்வாய் மொழி பொய்கை அணை யிலிருந்து தண்ணீர் திறந்து விட்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி கிராமத்தில் அமைந்துள்ள பொய்கை அணை யிலிருந்து, கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் மற்றும் திருநெல் வேலி மாவட்டம் இராதாபுரம் வட்ட பாசன நிலங்களுக்கு இன்று (18.11.2025) முதல் 03.12.2025 வரை 16 நாட்களுக்கு வினாடிக்கு 30 கன அடி வீதம் தண்ணீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்துவிட அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

இதன் மூலம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டங்களில் உள்ள ஆரல்வாய்மொழி, குமாரபுரம் மற்றும் பழவூர் கிராமங்களில் உள்ள 450.23 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரி வித்தார்கள்.

நடைபெற்ற செயற்பொ றியாளர் நீர்வளத்துறை திரு.அருள்சன் பிரைட், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.ஜென்கின் பிரபாகர், உதவி செயற்பொறியாளர்கள் திரு.வல்சன் போஸ், திரு.அஜீஸ், கோதையாறு நீர்பாசன தலைவர் திரு.வின்ஸ் ஆன்றோ, விவசாய சங்க பிரதிநி திகள், விவசாயிகள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ கோவை மாவட்டம் ஆனைமலை ஊராட்சி ஒன்றியம் அர்த்தனாரி பாளையம் ஊராட்சியில் அரசின் சாதனை விளக்க சிறு புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்



■ சிவகங்கை நகராட்சிக்குட்பட்ட தெற்கு மின் மயானத்தில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சிறு மின் விசை பம்பு திட்டத்தின் கீழ் நீர்நிலை தொட்டி சின்டெக்ஸ் டேங்க் அமைப்பதற்கான பணிகளை நகர்மன்ற தலைவர் சி எம் துரை ஆனந்த் பூமி பூஜையை நேற்று துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் சுகாதார அலுவலர் நல்லுசாமி சுகாதார ஆய்வாளர் சரவணகுமார் மற்றும் ஒப்பந்ததாரர் கண்ணன் மற்றும் நகராட்சி ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்..

வேலூரில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் திறன் பயிற்சி மையம் சார்பில் வெற்றி நிச்சயம் திட்டத்தில்

## மாணவர்கள் பயிற்சி பெற்று, வெற்றியடைய வெற்றி நிச்சயம் என்ற வாசகத்துடன் பேனர்கள் மற்றும் பதாகைகள் மாணவர்கள் பயன்பெரும் வகையில் விழிப்புணர்வு




வேலூர், நவ.19-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவா ச்சாரி, ஆட்சியர் அலுவலக வளாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் மாவட்ட திறன் பயிற்சி மையம் சார்பில் தமிழக முதல்வரின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தில் வெற்றி நிச்சயம் திட்டத்தில் மாணவர்கள் பயிற்சி பெற்று, வெற்றியடைய வெற்றி நிச்சயம் என்ற வாசகத்துடன் பேனர்கள் மற்றும் பதாகைகள் மாணவர்கள் பயன்பெரும் வகையில் விழிப்புணர்வு, மாவட்ட வேலைவாய்ப்பு மாவட்டத் திறன் பயிற்சி மையத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆங்காங்கே பேனர்கள் வைக்கப்பட்டுள்ளது. ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பேனருடன் எடுக்கப்பட்ட புகைப்படம். வேலூரில் இந்த பேனர்கள் வைக்கப்பட்டுள்ள இடங்கள் புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம் அருகில், அரசினர் பயிற்சி மையம் அருகில் (ஐ டி ஐ ), வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்பு, டோபிகானா பகுதி அருகில், கன்னிகாபுரம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அடுக்குமாடி குடியிருப்பு அருகில், வேலூர் மாவட்ட நூலகம் உள்ளிட்ட பொதுமக்கள் அதிக கூடும் இடங்களில் வெற்றி நிச்சயம் என்ற விழிப்புணர்வு பதாகைளை நிரந்தரமாக சிமெண்ட் கான்கிரீட் மூலம் அமைக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து பொதுமக்கள் பள்ளி கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டு பயன் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ தென்காசி மாவட்டம், புளியங்குடி நகராட்சி அலுவலக உதவி மையத்தில் நடைபெற்று வரும் சிறப்பு வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் தொடர்பான கணக்கீட்டு படிவம் பதிவேற்றம் மேற்கொள்வதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே. கமல்கிஷோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.




■ சிவகங்கை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தின் சார்பில் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற WALK FOR CHILDREN விழிப்புணர்வு பேரணியினை மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பிரான்சிஸ், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.துரை மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் உட்பட பலர் உள்ளனர்.




## பிரேமலதா விஜயகாந்த் போடிநாயக்கனூர் கட்டபொம்மன் சிலை அருகே கேப்டன் ரதத்திற்கு மரியாதை செலுத்தி நடைபயணம்

தேனி, நவ.19-

தேனி வடக்கு மாவட்டம் மற்றும் போடி நகர் தேசிய முற்போக்கு திராவிட கழகம் (தேமுதிக) சார்பில் பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் போடிநாயக்கனூர் கட்டபொம்மன் சிலை அருகே கேப்டன் ரதத்திற்கு மரியாதை செலுத்தி நடைபயணம் பிரச்சாரம் மேற்கொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக பழைய பேருந்து நிலையம் வந்தடைந்தார். வ உ சி சிலை அருகே இல்லம் தேடி உள்ளம் நாடி என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கட்சியின் நடவடிக்கைகள் மற்றும் அரசியல் நிகழ்வு, கட்சியின் எதிர்கால திட்டங்கள் வரவிருக்கும் 2026 ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணி நிலைப்பாடு மற்றும் பிற அரசியல் விவகாரங்கள் குறித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து ஜனவரி மாதம் 9ம் தேதி கடலூரில் நடக்கவிருக்கும் மாநாட்டிற்கு அனைவரும் கலந்து கொண்டு தனது அன்பான வேண்டுகோளை விடுத்துள்ளார். பொதுக்கூட்டத்தின் ஏற்பாடுகளை மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, அவைத்தலைவர் மாயி, பொருளாளர் பால்பாண்டி, நகரச் செயலாளர் காஜா மைதீன், நகர செயலாளர் சேது முருகன், “இல்லம் தேடி உள்ளம் நாடி மற்றும் மக்களை தேடி மக்கள் தலைவர்” ரத யாத்திரை நிகழ்வு ஏற்பாட்டினை மண்டல பொறுப்பாளர் பன்னீர்செல்வம், துணைச் செயலாளர் அழகர்சாமி, பொறியாளர்அணி துணைச் செயலாளர் கிருஷ்ணன், தொண்டரணி முருகன்,மகேந்திரன் மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள் மாவட்ட பொறுப்பாளர்கள் ஒன்றிய பேரூர் நகர கிளைக் கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் பலரும் கலந்து கொண்டனர்.



■ மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், தேனூர் ஊராட்சி கட்டப்புளி 400 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனைப் பட்டா இடத்தில் முதற்கட்டமாக 72 மாற்றுத்திறகள், 37 திருநங்கைகள், 85 வறுமைகோட்டிற்குள் கீழ் உள்ள நபர்கள் என மொத்தம் 194 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் புதிய வீடுகளின் கட்டிட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவின் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## மீனவ சமுதாயத்தை சார்ந்த பட்டதாரி இளைஞர்கள் இந்திய குடிமைப்பணிகளுக்கான போட்டித் தேர்வில்சிறந்து விளங்கிடும் வகையில், ஆயத்த பயிற்சி அளிக்கப்படவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.19-

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, அகில இந்திய குடிமைப்பணி பயிற்சி மையம் இணைந்து, ஆண்டுதோறும் 20 கடல் மற்றும் உள்நாட்டு மீனவ பட்டதாரி இளைஞர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குடிமைப்பணிகளுக்கான போட்டித்தேர்வில் கலந்து கொள்ள ஏதுவாக பிரத்யேக பயிற்சி அளித்திடும் திட்டத்தினை செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் ஆணை வழங்கப்பட்டது.

கடல் மற்றும் உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் வாரிசு பட்டதாரி இளைஞர்கள் இப்பயிற்சி திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்.

இத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற விரும்புவோர் விண்ணப்ப படிவம் (Application Form) மற்றும் அரசு வழிகாட்டு நெறிமுறைகளை (Guidelines) சிவகங்கை மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் கட்டணமின்றி பெற்று கொள்ளலாம்.

மேலும், விண்ணப் பதாரர் அரசு வழிகாட்டு நெறிமுறைகளின்படி, பூர்த்தி செய்து சிவகங்கை மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 25.11.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் கிடைக்கப்பெறும் வகையில் விண்ணப்பித்தல் வேண்டும்.

கூடுதல் விபரங்களுக்கு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, உதவி இயக்குநர் அலுவலகம், 5/3, யூனியன் வங்கி மேல்தளம், பெருமாள் கோயில் தெரு, சிவகங்கை 630 561 என்ற முகவரியில் நேரிலோ அல்லது மீன்வள ஆய்வாளர் அவர்களை 9384824553 என்ற அலைபேசி எண்ணிலும் மற்றும் மீன்வள மேற்பார்வையாளர் தரம் II –அவர்களை 9790656919 என்ற அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரி வித்துள்ளார்.



## பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் SIR ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது

பம்மல், நவ.19-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் தெற்கு பகுதி திமுக சார்பில் SIR ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது இதில் 5வது ,6வது வட்டங்கள் சார்பாக எல்.சி மஹாலிலும், 7வது, 8வது வட்டங்கள் சார்பாக சாய் ரக்சா மினி ஹாலிலும், 10வது,11வது,12வது வட்டங்கள் சார்பாக ஜமால் பேலசிலும் அந்தந்த வட்ட கழக செயலாளர்கள் தலைமையில் நடைபெற்றது இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக துணை செயலாளர் இ.கருணாநிதி, மற்றும் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர், தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத்தலைவர் வே.கருணாநிதி அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி SIR பற்றிய விளக்கங்களையும், ஆலோசனைகளையும் வழங்கினார்கள். இக்கூட்டத்தில் பம்மல் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், BLA 2, BDA மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

## சாலைப் பாதுகாப்பு விதிகளை முறையாக பின்பற்றாமல்,விதிகளை மீறும் வாகன ஓட்டுநர்கள் மீது, விதி மீறல்கள் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.19-

சிவகங்கை மாவட்டத்தில் சமீபத்தில் ஏற்பட்ட சில சோகமான சம்பவங்கள், சாலைப் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மீண்டும் உணர்த்துகின்றன. மேலும், பொதுமக்களின் பாதுகாப்பினை முதன்மைமப்படுத்தும் வகையில், சாலைப் பாதுகாப்பு விதிகளை மீறு வோர் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி, தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தினை இயக்கும் ஓட்டுநர்களின், ஓட்டுநர் உரிமத்தின் மீது மூன்று மாத தற்காலிக தடையுடன் மத்திய மோட்டார் வாகனச் சட்டம் 1988, பிரிவு 129 ன் படி ரூ.1,000 அபராதம் விதிக்கப்படும் எனவும், மது போதையில் வாகனத்தினை இயக்குதல் / சீல் பெல்ட் அணியாமல் வாகனத்தினை இயக்குதல் / செல்போன் பயன்படுத்தி கொண்டே வாகனத்தினை இயக்குதல் போன்ற செயல்களில் ஈடுபடுவோர்களின் ஓட்டுநர் உரிமங்களின் மீது தற்காலிக தடை நடவடிக்கை செய்யப்படுவதுடன், அசல் ஓட்டுநர் உரிமமும் பறிமுதல் செய்யப் படும். ஆட்டோ ரிக்சா வாகனதாரர்கள் தங்களது வாகனத்திற்கென அனுமதிக்கப்பட்ட பயணிகளுக்கு மேல் கூடுதலாக நபர்களை ஏற்றக்கூடாது. அதனை தவறும் பட்சத்தில், தனியர்களது வாகனம் சிறைபிடிக்கப்பட்டு, அனுமதிச் சீட்டும் இரத்து செய்யப்படும்.

மேலும், மினிப்பேருந்துகள் மற்றும் தடப்பேருந்து வாகனங்களினை இயக்கும் அனுமதிதாரர்கள் தங்களது வாகனங்களின் படிகளில் பொதுமக்கள், குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணாக்கர்கள் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும். இதில், குறைபாடுகள் கண்டறியப்படும் பட்சத்தில், பேருந்தின் முதன்மை அனுமதிச் சீட்டின் மீது தற்காலிக தடை நடவடிக்கை மேற்க்கொள்வதுடன் வாகனமும் சிறைபிக்கப்படும். அதேபோன்று, பள்ளி வாகனங்களின் ஓட்டுனர்கள் நிர்ணயிக்கப்பட்ட வேக அளவிலேயே பேருந்துகளை இயக்கிட வேண்டும். அதிவேகமாக பள்ளிப் பேருந்துகளை இயக்கும் ஓட்டுநர்களது ஓட்டுநர் உரிமமானது தற்காலிக தடை செய்யப்படுவதுடன், பள்ளிப் பேருந்தின் அனுமதிச் சீட்டும் இரத்து செய்யப்பட்டு, வாகனம் சிறைபிடிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தெரி வித்துள்ளார்.



■ மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் சட்டமன்ற சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாகமலை புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக நடைபெறும் உதவி மையத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை தொலைபேசி செயலி மூலம் பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்கள், சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்விற்கான பயிற்சி பெறுவதற்கு, இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.19-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து போன்ற முன்னனி வெளிநாட்டு பல்கலைகழகங்களில், இளங்கலை அல்லது முதுகலை பட்டபடிப்பு பயில அடிப்படையான சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்விற்கான பயிற்சி (International English Language Testing System (IELTS) ) வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியினை பெற விரும்பும் மாணாக்கர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவராகவும், 18 முதல் 35 வயதிற்குட்பட்டவராகவும், பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். மேலும், குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3.00 லட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். இப்பயிற்சிக்கான ஒன்றரை மாத கால அளவு, விடுதியில் தங்கி படிப்பதற்கான செலவினத்தொகை மற்றும் உணவு ஆகியவைகளுக்கான செலவினத்தொகை தாட்கோ சார்பில் வழங்கப்படும்.

எனவே, சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்விற்கான (International English Language Testing System (IELTS)) பயிற்சி பெற விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த இளைஞர்கள் தாட்கோ இணையதளமான www.tahdco.com என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

1.11.2025 ஆம் தேதிக்கு பிறகு ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பிய கிறித்தவர்கள்,

## புனித பயணம் மேற்கொண்டதற்கான நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கு, விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, நவ.19-

தமிழ்நாட்டைச் சார்ந்த அனைத்து பிரிவினரையும் உள்ளடக்கிய 600 கிறித்தவர்கள் பயனடையும் வகையில், ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டு திரும்பிய 550 கிறித்தவர்களுக்கு நபர் ஒருவருக்கு ரூ.37,000/ வீதமும், 50 கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு நபர் ஒருவருக்கு ரூ.60,000/வீதமும் ணிசிஷி முறையில் நேரடியாக மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற, 1.11.2025 ஆம் தேதிக்கு பிறகு ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்ட கிறித்தவ மத பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மேலும், இத்திட்டதின் கீழ் விண்ணப்பிப்பதற்கான விண்ணப்ப படிவத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்/ அலுவலகங்களிலிருந்து கட்டணமின்றி பெறலாம். அதுமட்டுமன்றி, www.bcmbcmw.tn.gov.in என்ற இணையதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எனவே, விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் வருகின்ற 28.02.2026 ஆம் தேதிக்குள் ஆணையர், சிறுபான்மையினர் நலத்துறை, கலசமஹால் பாரம்பரிய கட்டடம், முதல் தளம், சேப்பாக்கம், சென்னை600 005 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் பெறப்பட்டு வரும் பணிகளை

## சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி நேரில் ஆய்வு மேற்கொண்டார்

சேலம், நவ.19-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் பூர்த்தி செய்யப்பட்டதை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெறப்பட்டு வரும் பணிகளை சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்ற தொகுதி க்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். ஆய்விற்கு பின் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் ரூ 2026 அக்டோபர் மாதம் 28 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் கணக்கெடுப்பு பணிகள் சேலம் மாவட்டத்தில் 04.11.2025 அன்று முதல் டிசம்பர் 4 ம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அதனடிப்படையில் இன்றைய தினம் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கீட்டு படிவம் வழங்கப்பட்டு வாக்காளர்களிடம் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெறப்பட்டு வருகிறது. இந்திய தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை முறையாக பின்பற்றிட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்றையதினம் சேலம் மாவட்டம், ஏற்காடு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அத்தனூர்பட்டி மற்றும் காட்டுவேப்பிலைப்பட்டி பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பெற்று வரும் பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், தொடர்புடைய வாக்குச்சாவடிக்கு உட்பட்ட வாக்காளர்களில் நிரந்தரமாக குடிபெயர்ந்த வாக்காளர்கள், இறந்து போன வாக்காளர்களின் விவரங்களை அறிந்து கொண்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்த கணக்கீட்டுப் படிவங்களை பெற வரும் தேதியினை முன்கூட்டியே வாக்காளர்களுக்கு தெரியப்படுத்தி அனைத்து வாக்காளர்களிடமிருந்தும் கணக்கீட்டுப் படிவங்கள் பெறுவதை உறுதி செய்திடவும் இந்த ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து வாழப்பாடி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த உதவி மையத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, வாக்காளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.



■ சிவகங்கை மாவட்டம், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் மகாத்மா காந்தி மற்றும் ஜவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணாக்கர்களிடையே நடைபெற்ற பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்ற 16 மாணாக்கர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.செல்வசுரபி அவர்கள் பரிசுத்தொகைக்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி ச.சீதாலெட்சுமி, தனித்துணை ஆட்சியர் திரு.அனீஸ் சத்தார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.



■ வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகள் 2026 குறித்து திருநங்கைகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

## சென்னை பெருநகரத்திற்கு அடுத்த 25 ஆண்டுகளுக்கான பொதுப் போக்குவரத்து திட்டங்கள் வெளியீடு

*சென்னை, நவ.19–*

*சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு (CUMTA). சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வாழும் லட்சக்கணக்கான மக்கள் பொது போக்குவரத்தை பயன்படுத்தி வருகின்றனர். அதிலும் குறிப்பாக மின்சார ரெயில் சேவை முக்கியப் பங்கு வகிக்கிறது. இதைதவிர மாநகர பஸ்கள், மெட்ரோ ரெயில், ஏசி மின்சார ரெயில்கள் உள்ளிட்டவற்றையும் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.சென்னையில் மக்களின் வசதிக்காக பொதுப் போக்குவரத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், சென்னை பெருநகரத்திற்கு அடுத்த 25 ஆண்டுகளுக்கான பொதுப் போக்குவரத்து திட்டங்களை சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு (CUMTA) வெளியிட்டுள்ளது. மேலும் திட்டங்களுக்கான பரிந்துரைகளை சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்பு தமிழ்நாடு அரசிடம் வழங்கியுள்ளது.*

* *சென்னையில் அடுத்த 25 ஆண்டுகளில் சென்னையில் 346 புதிய பேருந்து நிறுத்தங்கள், 30 புதிய பஸ் டிப்போக்கள்.*
* *தாம்பரம் அடையாறு, பெருங்களத்தூர் மாதவரம் (புறவழிச் சாலை வ ழியே) புதிய மெட்ரோ வழித்தடங்கள்.*
* *கோயம்பேடு பூந்தமல்லி, பல்லாவரம், குன்றத்தூர், வண்டலூர் கேளம்பாக்கம் வழித்தடங்களில் நியோ மெட்ரோ சேவை.*
* *எண்ணூர் சிங்கப்பெருமாள் கோவில், ஸ்ரீபெரும்புதூர் காஞ்சிபுரம் ஆகிய புதிய வழித் தடங்களில் புறநகர் ரயில் சேவை.*
* *தியாகராய நகர்நுங்கம்பாக்கம் நந்தனம் லைட் ஹவுஸ் இடையே டிராம் சேவை.*
* *சென்ட்ரல் கோவளம் மாமல்லப்புரம் தடத்தில் இரு கட்டங்களாக வாட்டர் மெட்ரோ சேவை.*
* *சென்னை துறைமுகம்பரந்தூர் மாமல்லபுரம் திருப்பதியை மையமாக கொண்டு மணிக்கு 240 கி.மீ. வேகத்தில் ஏர் டாக்ஸி சேவை போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளது.*

## காரைக்குடி மாநகராட்சி, சிவகங்கை, மானாமதுரை மற்றும் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் கா.பொற்கொடி நேரில் களஆய்வு

சிவகங்கை, நவ.19-

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சி, சிவகங்கை, மானாமதுரை மற்றும் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் கா.பொற்கொடி, நேரில் களஆய்வுகள் மேற்கொண்டு தெரிவிக்கையில்,

இந்த ஆய்வின் போது, காரைக்குடி மாநகராட்சி அலுவலகம், சிவகங்கை, மானாமதுரை மற்றும் தேவகோட்டை ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களில் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கும் பணிகள் குறித்து நியமிக்கப்பட்டுள்ள அந்தந்த நிலையிலான அலுவலர்கள் மற்றும் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் களஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி 01.01.2026 ஆம் தேதியை தகுதி நாளாகக் கொண்டு, சிவகங்கை மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பணியின் முதற்கட்டமாக, 27.10.2025ஆம் தேதி வரை வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும், சுய விபரங்கள் பகுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவங்கள் இரட்டைப் பிரதிகளில் சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வருகின்ற 04.12.2025 ஆம் தேதி வரை வாக்காளர்களது இல்லங்களிலேயே வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் (BLO) பொதுமக்கள் படிவங்களை எவ்வாறு பெறுவது மற்றும் படிவங்களை பூர்த்தி செய்து உரிய காலத்திற்குள் வழங்குவது குறித்து, பொதுமக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விநியோகம் செய்யப்பட்டு வரும் கணக்கெடுப்புப் படிவங்களை பூர்த்தி செய்வதில் ஏதேனும் சிரமம் இருப்பின், பொதுமக்கள்



அலுவலக நேரங்களில் 1950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் வாயிலாகவோ அல்லது சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கள் மற்றும் உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்களை நேரில் அணுகியோ விபரங்கள் பெறலாம். குறிப்பாக, மேற்கண்ட அலுவலர்களின் தொடர்பு எண்களும் முன்னதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள படிவத்தினை உரிய முறையில் பூர்த்தி செய்வதற்கு ஏதுவாக, அதன் அதற்குரிய விபரங்களை https://erolls.tn.gov.in/electoralsearch/ அல்லது voters.eci.gov.in என்ற இணையதள முகவரிகளின் வாயிலாக வாக்காளர்கள் அறிந்து கொள்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கணக்கெடுப்புப் படிவங்களை பெறாத வாக்காளர்கள், தங்களது பகுதிக்கான வாக்குச்சாவடி நிலை அலுவலர் குறித்த விபரத்தினை Voters Helpline செயலியின் வாயிலாக அறிந்து கொண்டு, கணக்கெடுப்புப் படிவங்களை பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே, வாக்காளர்கள் இதனை முறையாக பயன்படுத்திக் கொண்டு தங்களது வாக்குரிமையை நிலைநாட்டுவதற்கு குறித்த காலத்திற்குள் படிவங்கள் முழுமையாக பூர்த்தி செய்து வழங்கிடல் வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி கா.பொற்கொடி தெரிவித்தார்.

மேற்கண்டவாறு நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடர்பாக காரைக்குடி மாநகராட்சி அலுவலகம், சிவகங்கை, மானாமதுரை மற்றும் தேவகோட்டை ஆகிய வட்டாட்சியர் அலுவலகங்களில் வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கும் பணிகள் குறித்து நியமிக்கப்பட்டுள்ள அந்தந்த நிலையிலான அலுவலர்கள் மற்றும் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் தொடர்பாக பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் ஆகியன குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் / மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்கள் நேரில் களஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, நகராட்சி ஆணையாளர்கள், வட்டாட்சியர்கள் உட்பட சம்மந்தப்பட்ட நிலையிலான அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



# கோவை வடவள்ளியில் வாக்காளர் உரிமை மற்றும் குடியுரிமையை வலியுறுத்தி இந்தியா ஒற்றுமை இயக்கம் தமிழ்நாடு சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

கோவை, நவ.19-

கோவை வடவள்ளி பேருந்து நிலையம் அருகில் இந்திய ஒற்றுமை இயக்கம் சார்பில் வாக்காளர் சிறப்பு திருத்தம் எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராகவும் தமிழ்நாடு தேர்தல் அலுவலகம் மற்றும் ஒன்றிய அரசு பாஜகவை கண்டித்து மேற்கு மண்டல செயலாளர் பேராசிரியர் காமராஜர், தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு இந்திய ஒற்றுமை இயக்கம் மாநில பொருளாளர் டென்னிஸ் கோவில் பிள்ளை முன்னிலை வகித்தார்.

இதுகுறித்து இந்திய ஒற்றுமை இயக்கம் மாநில பொருளாளர் டென்னிஸ் கோவில் பிள்ளை கூறுகையில் பிஜேபி அரசாங்கமும் தேர்தல் ஆணையமும் இணைந்தே தன் மக்களின் வாக்குகளை கொள்ளையடித்து கொண்டிருக்கிறார்கள். திருட்டுத்தனமாக தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பல வியூகங்களை வகுத்து வைத்துள்ளனர்... எனவே தேர்தல் ஆணையத்தையே கலைக்க வேண்டும் என்று கூறினார்...

ஆர்பாட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக திமுக வ.ம சண்முகசுந்தரம், தந்தை பெரியார் திராவிட கழகம் கு. ராமகிருட்டிணன், வெண்மணி திராவிட தமிழர் கட்சி, மாணிக்கம் விடுதலை சிறுத்தை கட்சி, மலரவன் புரட்சிகர இளைஞர் முன்னணி , சந்திரசேகரன் தமிழக வாழ்வுரிமை கட்சி . உள்ளிட்ட பல்வேறு இயக்கங்களை சேர்ந்த நிர்வாகிகள் உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு தமிழக தலைமை தேர்தல் அதிகாரி ஞானேஷ் குமாரை கைது செய்ய வேண்டும் என்று கோசமிட்டனர் மேலும் ஒன்றிய அரசுக்கு எதிராகவும் பல்வேறு கோஷங்கள் எழுப்பினர்...

# சிறப்பான சேவையில் 60 ஆண்டுகள் நிறைவு சுந்தரம்பைனான்ஸ் வைரவிழா கொண்டாட்டம்

திருநெல்வேலி, நவ.19-

சுந்தரம் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் திருநெல்வேலி கிளை, திருநெல்வேலி வாழ் மக்களுக்கு 60 ஆண்டுகாலமாக சிறப்பான சேவையைத் தொடர்ந்து வழங்கியதை பெருமிதத்துடன் நிறைவு செய்திருக்கிறது. இதன் மூலம் தனது பயணத்தில் வெற்றிகரமாக ஒரு அர்த்தமுள்ள மைல்கல்லை இந்நிறுவனம் எட்டியிருக்கிறது. வாடிக்கையாளர்களுடனான நீடித்த கூட்டாண்மை, பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் திருநெல்வேலி கிளையின் பாரம்பரியத்தை வடிவமைத்த அவர்களது குடும்பத்தினரின் ஆதரவு ஆகியவற்றை அங்கீகரித்து, நன்றியுணர்வோடு கௌரவிக்கும் ஒரு நிகழ்வாக இன்றைய கொண்டாட்டம் அமைந்தது.



"சுந்தரம் ஃபைனான்ஸில், பல ஆண்டுகளாக செயல்படுவது உண்மை, நேர்மை மற்றும் சேவை மனப்பான்மையே எங்களுக்கு அர்ப்பணிப்பையும், சிறப்பான சேவையாற்றும் உத்வேகத்தையும் வழங்குகிறது. திருநெல்வேலி கிளையானது, சேவை, சமூக மக்களின் நம்பிக்கையாலும், விசுவாசத்தாலும் வலுவாக நீடித்து நிலைத்திருக்கிறது" என்றார் சுந்தரம் ஃபைனான்ஸின் தமிழ்நாடு பிராந்தியத்தின் தலைவரும், நிறுவனத்தின் முதுநிலை துணைத் தலைவருமான ராஜேஷ் வெங்கட்.

"1960ல் நிறுவப்பட்ட திருநெல்வேலி கிளை, திருநெல்வேலியில் நிதிச் சேவைகளை மக்கள் எளிதாகப் பெறுமாறு கொண்டுபோய் சேர்ப்பதில் முக்கியப்பங்காற்றியுள்ளது. பெரும்பாலும் பிரதான நிதி நிறுவனங்களின் சேவைக்கு அப்பாற்பட்டிருந்த வாடிக்கையாளர்களுக்கு முக்கியமாக சேவையாற்றி வந்திருக்கிறது. சிறு வணிக உரிமையாளர்கள், முதல் முறை கடன் பெறுவோர், சுயதொழில் வல்லுநர்கள் மற்றும் போக்குவரத்து வாகன நிறுவன உரிமையாளர்கள் என பல தரப்பினரும் நம்பகமான நிதி கூட்டாளியாக இந்தக் கிளையை கருதுகின்றனர் மற்றும் இதன் நிதி சேவைகளின் மூலம் பயனடைந்திருக்கின்றனர்" என்றார் சுந்தரம் பைனான்ஸ் திருநெல்வேலி கிளையின் மூத்த கிளை மேலாளர் கூஷி ஆனந்த குமார் இந்தக் கிளை, நிதி ஆதரவை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவது என்ற குறிக்கோளையும் கடந்து, அதைவிட மேலானதாக வெளிப்படைத்தன்மை, கண்ணியம் மற்றும் மனிதாபிமான அணுகு முறைக்காக வாடிக்கையாளர்களின் அசையா நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது. தலைமுறை தலைமுறையாக வாடிக்கையாளர்கள் தங்கள் வாழ்வாதாரங்களைக் கட்டமைக்கவும், நம்பிக்கையுடன் வாழவும் சுந்தரம் ஃபைனான்ஸ் ன் இக்கிளை உதவியுள்ளது.

திருநெல்வேலி கிளையின் பலம் அதன் பணியாளர்களிடம் தான் உள்ளது. பல பணியாளர்கள் தங்கள் பணிக்காலத்தின் (கரியர்) குறிப்பிடத்தக்க பகுதிகளை இங்கு செலவிட்டுள்ளனர்; திறமையுடன் மட்டுமல்லாமல், நேர்மை, புரிந்துணர்வு மற்றும் குறிக்கோளுடனும், அர்ப்பணிப்பு மிக்க சேவையை வழங்கியிருக்கின்றனர். வாடிக்கையாளர்களுடனான அவர்களின் பிணைப்பு வெறும் நிதி பரிவர்த்தனைகளுக்கும் அப்பாற்பட்டது; பரஸ்பர மரியாதை மற்றும் பகிரப்பட்ட வளர்ச்சியின் மீது கட்டமைக்கப்பட்ட நல்லுறவாக அது இருக்கிறது.

இந்த மைல்கல் நிகழ்வானது, ஒவ்வொரு சாதனைக்குப் பின்னாலும் அமைதியாக துணைநின்ற பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களையும் கௌரவிக்கிறது. இந்த நீண்ட பயணத்தை சாத்தியமாக்குவதில் அவர்களின் பங்கை அங்கீகரிக்கும் விதமாக, திரு. ராஜேஷ் வெங்கட் அவர்களால் தனிப்பட்ட முறையில் கையொப்பமிடப்பட்ட மனமார்ந்த பாராட்டுக் கடிதங்கள், பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு இந்நிகழ்ச்சியில் வழங்கப்பட்டன.

சுந்தரம் ஃபைனான்ஸ் 2029ல் தனது 75வது ஆண்டு விழாவைக் கொண்டாடத் தயாராகி வரும் வேளையில், இந்த கிளையின் வைரவிழா நிகழ்வானது, நிறுவனத்தின் ஸ்தாபக தத்துவத்தை நேர்மையுடன் சேவை, பணிவுடன் வளர்ச்சி மற்றும் சமூக நலனில் அக்கறை ஆகிய பண்பியல்புகளை மீண்டும் உறுதிப்படுத்துவதாக அமைகிறது.தொடர்ச்சியான சேவை, நற்பண்பு மற்றும் சரியானதைச் செய்வதற்கான அர்ப்பணிப்பின் ஒரு அடையாளச் சின்னமாகவும் திகழ்கிறது,

# பழனியில் நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வாடகைக்கு கொடுக்கப்பட்டதை தட்டி கேட்ட திமுக கட்சி பிரமுகருக்கு அடி உதை

## பழனி அரசு மருத்துவமனையில் அனுமதி





திண்டுக்கல், நவ.19-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடிவாரம் பகுதியில் நகராட்சி சார்பில் கட்டண கழிப்பிடம் செயல்பட்டு வருகிறது.

இந்த கழிப்பிடம் பழனி நகராட்சியின் மூலம் ஏலம் விடப்பட்டு செயல்பட்டு வருகிறன்றது.

இதனிடையே நகராட்சி கழிப்பிட கட்டிடம் முன் பகுதியிலும் மற்றும் செப்டிக்டேங் இடத்தையும் சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் ஆக்கிரமிப்பு செய்த இடத்தில் கடையில் அமைக்கப்பட்டு பெரிய தொகைக்கு உள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது..

இந்த ஆக்கிரமிப்பு சம்பந்தமாக அப்பகுதி நகர் மன்ற உறுப்பினர் சுபா தமிழ்மணி மற்றும் கட்சி பொறுப்பாளர்கள் கேட்ட பொழுது இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

தொடர்ந்து இந்த வாக்குவாதம் கைகலப்பாக மாறி கவுன்சிலர் சுபா தரப்பில் வெங்கடேஷ் என்பவர் கடுமையாக தாக்கப்பட்டார்.

இதனால் அவர் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனிடையே எதிர் தரப்பினர் நகர மன்ற உறுப்பினர் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் தாக்கியதாக கூறி நாடகம் ஆடுவதாக கவுன் சிலர் தரப்பினர் கூறி வருகின்றனர்.

மேலும் இந்த சம்பவம் பற்றி பழனி காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர்.

அப்பகுதியை பெண்கள் முற்றுகையிட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்களை நகராட்சி அதிகாரிகள் உடனடியாக ஆக்கிரமப்புகளை அகற்றப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தனர்.

மேலும் அப்பகுதியில் உள்ள சாலையோர வியாபாரிகளுக்கு அடையாள அட்டையின் மூலம் இடம் ஒதுக்கி தர வேண்டும் என்றும் உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப் பட்டனர்.

தொடர்ந்து திமுக பிரமுகர் தாக்கப்பட்ட சம்பவம் பழனி பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





# சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி மன்ற கூட்டம்

சிவகங்கை, நவ.19-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சி மன்ற கூட்டம் பேரூராட்சி தலைவர் நஜிமுதீன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் துணை பேரூராட்சி தலைவர்,செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.இக்கூட்டத்தில் 17வது வார்டு கவுன்சிலர் நாகூர் மீரா பேசியது:

அம்ரூத் 2.0 வைகை கூட்டுக் குடிநீர் திட்டம் 28 கோடி மதிப்பீட்டில் டென்டர் விடப்பட்டு இளையான்குடி முழுவதும் ரோடுகள் தோண்டப்பட்டு பைப்லைன் போடப்பட்டுள்ளது இதற்காக அனைத்து ரோடுகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளது ஆனால் இந்த குடிநீர் திட்டத்திற்கு முக்கியமாக முதன்மைப்பணியாக செய்ய வேண்டிய கிணறு தோண்டும் பணி இன்னும் நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது பிரதான மெயின் பைப் லையன் இன்னும் போடப்படவில்லை பேரூராட்சி நிர்வாகம் திட்டத்தை முடக்கும் நோக்கத்தில் மெத்தனமாக செயல்படுகிறது எனவே மாவட்ட ஆட்சியரை தலைவர் கவுன்சிலர்கள் உடனடியாக சந்தித்து திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி பேசினார்..

# அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் முதன்முறையாக மூளைச்சாவு அடைந்தவரின் உடல் உறுப்பு தானம்



சிவகங்கை, நவ.19-

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த புதுக்குளம் கிராமத்தைச் சேர்ந்த முத்து (54) விபத்துக் காரணமாக கடுமையான தலையில் காயம் அடைந்த நிலையில் அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார். தீவிர சிகிச்சை பிரிவில் சிறப்பு மருத்துவர்கள் அளித்த முழுமையான சிகிச்சையின்போதிலும், அவரது உடல் நிலை முன்னேற்றமின்றி 17.11.2025 அன்று மாலை மூளைச்சாவு என மருத்துவ குழுவால் அறிவிக்கப்பட்டார். அவர் மனைவி மற்றும் உறவினர்கள் ஆழ்ந்த துயரத்திலும், உயர்ந்த மனநிலையுடனும் அவரது உடற்பாகங்களை தானமாக வழங்க ஒப்புதல் அளித்தனர்.

நோயாளியின் இருதயத் துடிப்பு நிலை சிறப்பாக பராமரிக்கப்பட்ட நிலையில், 18.11.2025 அன்று காலை உறுப்பு குழுவினரால் கல்லீரல், இரண்டு சிறுநீரகம், கருவிழி மற்றும் தோல் எந்த ஒரு சேதமின்றி பெறப்பட்டது

பெறப்பட்ட உறுப்புகள் பின்வருமாறு மாற்று சிகிச்சைக்காக அனுப்பப்பட்டன:

கல்லீரல் ஸ்ரீனிவாசன் மெடிக்கல் கல்லூரி, திருச்சி,

இடது சிறுநீரகம் அரசு ராஜாஜி மருத்துவமனை, மதுரை,

வலது சிறுநீரகம் காவிரி மெடிக்கல் சென்டர், திருச்சி

தோல் கிரேஸ் கென்னெட் அறக்கட்டளை தோல் வங்கி, மதுரை

இரு கருவிழி (கார்னியா) அரசு சிவகங்கை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

இந்த உயரிய செயல் பலருக்கு புதிய வாழ்க்கையை வழங்கும் வகையில் மிகவும் பாராட்டத்தக்கது. துயர தருணத்திலும் மக்களுக்கு உயிர் கொடுக்கும் பணியில் இணைந்த அவரது குடும்பத்தினருக்கு அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரியின் சார்பில் ஆழ்ந்த நன்றி தெரிவிக்கப்படுகிறது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைப்படி அன்னாரின் உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்பட்டது இந்த நிகழ்வில் அரசு சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வர் , மருத்துவ கண்காணிப்பாளர். நிலைய மருத்துவர். உதவி நிலைய மருத்துவர்கள், அனைத்து துறைகளின் பேராசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், நிர்வாக பணியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்வது தொடர்பாக

# வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் BLO செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி, நவ.19–

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், பெரியகுளம் வட்டம் தேவதானப்பட்டி கல்வி எஜுகேஷன் இன்ஸ்டிடியூட் மற்றும் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் (Special Intensive Revision) மேற்கொள்வது தொடர்பாக, வாக்காளர் களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் BLO செயலியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக் கப்பட் டுள்ளவாறு, தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணிகள் நடைமுறைக்கு வரப்பெற்று, தேனி மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகு திகளிலும் 04.11.2025 முதல் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் (Booth Level Officer - BLO) இல்லம் தோறும் சென்று, கணக்கெடுப்புப் படிவம் விநியோகம் செய்யப்பட்டு, சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வாக்கா ளர்களால் விவரங்கள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னர் அதனை திரும்ப பெற்று அப்படிவங்கள் கணினியில் பதிவேற்றம் செய்து வரைவு வாக்காளர் பட்டியல் தயார் செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்று போடிநாயக்கனூர் வட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், பெரியகுளம் வட்டம் தேவதானப்பட்டி கல்வி எஜுகேஷன் இன்ஸ்டிடியூட் மற்றும் ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து பெறப்பட்ட வாக்காளர் கணக்கீட்டு படிவங்கள் BLO செய லியில் (App) பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சி த்தலைவர் நேரில் பார்வையிட்டு, பணிகளை சரியாகவும், விரைவாகவும் மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வில் மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.நல்லையா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி கவிதா, வட்டாட்சியர்கள்சந்திரசேகரன் (போடிநாயக்கனூர்), மருது பாண்டி (பெரியகுளம்), திரு.ஜாஹிர் உசேன் (ஆண்டிபட்டி) உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



# கே.வி.குப்பம், பி டி ஓ அலுவலக வளாகத்தில் மகளிர் சுய உதவி குழு சார்பில் கவர்ச்சிகரமான வண்ணக் கோலங்களுடன் எஸ்.ஐ.ஆர். விழிப்புணர்வு

வேலூர், நவ.19-

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் தாலுகா, கே.வி.குப்பம் பி.டி.ஓ. அலுவலக வளாகத்தில், மகளிர் சுய உதவிக்குழு வட்டார மேலாண்மை அலுவலகத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (SIR) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகளிர் சுய உதவி குழுவினர் சார்பில் கவர்ச்சிகரமான வண்ணக் கோலங்களுடன் எஸ்.ஐ.ஆர். விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161